**Minutes of Public Hearing held on 15.05.2023 at 11:00 AM held in Alagu Mahal A/C Kalyana Tirunelveli – Nagarcoil Highways, Near Sengulam Railway Station, Sengulam Village, Palayamkottai Taluk, Tirunelveli District – 627 152 with respect to the project of M/s. Kasirajan, Rough Stone, Jelly & Gravel Quarry at S.F.No. 530/3A, 531/1A, 532, 533/1, 568/5A(P) and 569/3A, Tharuvai Village, Palayamkottai Taluk, Tirunelveli District.**

**Details of participants in this meeting:**

| | | |
|---|---|---|
| 1. Mr. R. Chandarasekar | - | Revenue Divisional Officer, Tirunelveli |
| 2. Mrs.C.Suyambu Thangarani | - | District Environmental Engineer Tirunelveli |
| 3. Public and Government officials | - | Details are attached(Annexure-1) |

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the District Revenue Officer, Tirunelveli who came to preside over Public hearing and all the people and government officials who were present in the meeting. Then, Revenue Divisional Officer, Tirunelveli invited the public to register their views about the project one by one after power point presentation. He also requested to mention their name and village before registering their views.

Following this, Mr. B.Swaminathan, Project Consultant for the proposed M/s. Kasirajan Rough Stone, and Gravel Quarry explained the project in detail to the public through Power Point Presentation.

After that, the public began to express their views which are as follows:-

1. **Thiru. S.P. Muthurman, Environment Activist, Tirunelveli:-**

He asked whether the accreditation of the consulting firm has been renewed since, the accreditation was expired on March. If renewed, he asked to produce the valid renewal certificate. The consultant also searched online and downloaded the updated the renewal certificate and displayed the valid accreditation renewal certificate. He also said that, the Police Department and Revenue Department are participating in the Public Hearing but the Geology and Mines Department people not attending the public Hearings for the mines project. If any doubt or clarifications are required for the public regarding the mines other department officials cannot answer, only the mines department officials can clarify but they have not attended the meeting. Earlier, they were attending the public hearings. But now a days they are not attending. Hereafter in future the note has to be put up to the Mines Department requesting to attend the public hearings. The

Adaimithipankulam village is known to all over India because of the accident that occurred in a quarry. While, executing the mining operation in the quarry the benches are to be provided for proper quarrying but the most of the mines are not doing so. In Tirunelveli District, a major accident has occurred in the mines which was an example to whole India. During such accidents, the rescue operations cannot be carried out easily. The Disaster Management team can only carry out the rescue operations. During mining operation, there are no proper inspections. Environment Department as well as Mines Department has to inspect periodically. The mining Closure plan is submitted by the Proponents. After the completion of 5 years the mining closure plan are not executed and the mines are left as such. The rain water gets stagnated in the quarry pits and the children are falling into these pits and losing their life. It occurs all over Tamil Nadu. After the completion of the mining operation, the quarry has to be fenced so as to prevent the accessibility to the quarry or otherwise the quarry has to be handed over to the Government. The Government will convert these as water bodies. The mining closure plans are submitted for name sake and nobody is implementing the mining closure plan. It is not verified by the officials also. Most of the mining pits are open without any fencing around. The consulting firm has to enclose the valid accreditation certificate along with the EIA report. In the EIA report submitted 45 days earlier the old accreditation certificate is enclosed. During the public hearing conducted for the Hi-Tech quarry the EIA reports for 3 quarries were presented in a single public hearing. The Hi-Tech company has already obtained environment clearance for a quarry. In that environment clearance it was stated that within 500meter radius the total extent of quarries to be permitted should not exceed 5 Hectares and the same is mentioned in the mining rules also. In this situation how 3 quarries can be permitted. As a consultant you might have brought this issue to the knowledge of the proponents and you might have told that it is not possible to get the permission to these quarries, if the total extent exceeds 5 hectares. Since you have not done that job, we were forced to approach the court. Another important issue in the quarry is the transport. If a lorry of 10 tons' load moves in the road it is like a buffaloes moving in the road. if 30 to 40 tons' load torres lorries move in the road it is just like the elephant moving in the road. Nothing else can go on the either sides. Accidents are happening often. Earlier they were using 10 ton lorries but nowadays they are saying that they are using 20 tons' lorries. But actually they are using 30-40 tonnes lorries. Hence necessary action has to be taken in this regard. The quarry operation is not a long term project, it's only a short term project for about only 5 years. So no permanent workers are employed in the quarries only temporary workers are engaged. No proper safety measures are adopted during the quarrying operation. All safety measures have to be taken for the safety of workers. In Private quarries no safety measures are taken. Often inspection has to be carried out to verify whether proper safety measures are provided in the quarry. Thus he registered his views as above.

2. **Thiru. Mariadass, Alangulam, Tharuvai village:-**

He said that, there is no problem due to this project and they are all benefited because of the crusher for their employment and livelihood. This quarry is in existence for the past ten years and there is no issues due to this quarry and everything is good.

3. **Thiru. Chelldurai, Eswariyapuram, Tharuvai village:-**

He said that, nothing is affected due to this quarry and it is beneficial to them.

4. **Thiru. Cesumuthu, Eswariyapuram:-**

He said that, this quarry is nearer to his village and there are no issues due to this quarry.

5. **Thiru. Balasubramanian, Thidiyur:-**

He said that, most of the boys in his village are working as drivers in Hitachi and lorries in the quarry. Due to this quarry, there is employment for their people. Definitely this quarry is beneficial and nothing harmful to them.

6. **Thiru. Thangamani, Kandithankulam village:-**

He thanked the officials for conducting the public hearing. He also said that workers residing in the nearby villages are dependent on this quarry. Due to non operation of the quarry, livelihood is affected and they are not able to give proper education to the children. There is unemployment. This type of work cannot be done by educated people. The uneducated daily coolies can do this work. This has to be kept in the mind. The proper advice has to be given to the entrepreneurs to regulate the lorry traffic and control the dust emission and the quarry has to be permitted to operate.

7. **Thiru. Daniel, Kandithankulam:-**

He said that the quarry can be permitted to operate provided the quarrying has to be done within the permitted quantity with following rules and regulations of the government. More families will get benefits due to this quarry. The peoples working in the quarry will have development in their life. He requested to grant permission to the quarry.

8. **Thiru. Jebastin, Kandithankulam:-**

He said that their livelihood were affected, since the quarries in the Tharuvai village of Tirunelveli District were not in operation for the past one and half years. He said that he is a driver and due to unemployment he is going for masonry works and for agriculture works. He is not able to send his children to school. Due to this quarry there are no issues but due to some reasons it was stopped. He said that it

will be helpful to them if the quarry is permitted to operate and he said that there will be no issues if the proper blasting techniques and air pollution control measures are adopted by the quarries. He requested the lorry drivers to be careful while driving with the loads. He requested to provide the proper facilities and necessary arrangements to the lorry drivers. If this quarry operates they will get opportunity to work nearby their villages. Around 200 persons residing in 7 to 8 nearby villages have lost their jobs. The quarry operation has to be resumed for the reemployment of these 200 people Due to this project, there is no issues for them and he requested to grant permission to start the quarry immediately.

Then the Revenue Divisional Officer, Tirunelveli announced that the views of the public are video recorded and the same will be sent to the Government. He also thanked the public for participating in the public hearing. After this, the written petitions from the public were received by the Revenue Divisional Officer, Tirunelveli. The meeting ended.

23.5.23

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tirunelveli.

Revenue Divisional Officer,
Tirunelveli.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தருவை கிராமம், புல எண்கள்: 530/3A, 531/1A, 532 ,533/1, 568/5A பகுதி மற்றும் 569/3A, விஸ்தீரணம் 4.97.0 ஹெக்டேரில் அமையவுள்ள தி/ள். எஸ். காசிராஜன் ரஃப் ஸ்டோன் , ஜல்லி மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 15.05.2023 அன்று முற்பகல் 11:00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், செங்குளம் கிராமம் தேசிய நெடுஞ்சாலை – 7, திருநெல்வேலி – நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையின் அருகில் அமைந்துள்ள அழகு மஹால் A/C. கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நிகழ்வின் சுருக்கம்:-

இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. இரா. சந்திரசேகர் | - | வருவாய் கோட்டாட்சியர்,<br>திருநெல்வேலி. |
| 2. | திருமதி. செ. சுயம்பு தங்கராணி | - | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |
| 3. | பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் | - | விபரம் இணைக்கப்பட்டுள்ளது.<br>(இணைப்பு - 1) |

—000—

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்த வருகை தந்த திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர், கலந்து கொள்ள வந்துள்ள பொதுமக்கள், அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்றார். பின்பு பேசிய திருநெல்வேலி மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை, திட்டத்தினைக் குறித்த விளக்கத்தினை திட்ட ஆலோசகர் தெரிவித்தபின் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை தெரிவித்து கருத்துக்களை பதிவு செய்யமாறு கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இத்திட்டம் குறித்த விளக்கங்களை தி/ள். எஸ். காசிராஜன் ரஃப் ஸ்டோன், ஜல்லி மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் திட்ட ஆலோசகர், திரு. B. சுவாமிநாதன் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொது மக்களுக்கு விளக்கினார்.

அதனைத் தொடாந்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடாங்கினார்கள், அவை பின்வருமாறு:-

1. திரு. எஸ்.பி.முத்துராமன், சுற்றுச்சூழல் ஆர்வலர், திருநெல்வேலி:-

இத்திட்டத்தின் ஆலோசகரிடம் ஆலோசனை நிறுவனத்தின் அங்கீகாரம் மார்ச் மாதத்திலேயே முடிவடைந்துவிட்டதாகவும் அது புதுப்பிக்கபட்டுவிட்டதா என வினவினார். அவ்வாறு புதுப்பிக்கப்பட்டிருப்பின் அதன் நகலினை காட்சிபடுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

அதனை அடுத்து திட்ட ஆலாசனை நிறுவனத்தினர் அவர்களின் அங்கீகாரம் புதுப்பிக்கபட்டதற்கான சான்றினை இணையத்தில் பதவிறக்கம் செய்து காட்சிப்படுத்தினர். இக்கூட்டத்திற்கு காவல் துறையினர், வருவாய் துறையினர் ஆகியோர் வருகிறார்கள் ஆனால் புவியியல் மற்றும் சுரங்கத்துறையினர் வருவதில்லை. சுரங்கங்கள் பற்றிய விவரங்கள் உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறையினருக்கே தெரியும் அவர்களே மக்கள் கேட்கும் விவரங்ளை சொல்ல முடியும் ஆனால் அவர்கள் வருவதில்லை. பொதுவாக இந்த கூட்டத்திற்கு மட்டுமல்லாது எல்லா கூட்டங்களுக்குமே சுரங்கத்துறையை சார்ந்த அதிகாரிகள் வருவதில்லை. சுரங்க குத்தகை பற்றி ஏதேனும் விவரங்கள் கேட்பதாக இருந்தால் உங்களிடத்தில் கேட்டால் நீங்கள் சொல்ல முடியாது. அதை உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்கள்தான் சொல்ல முடியும் ஆனால் அவர்கள் பொதுவாக இந்த கூட்டத்திற்கு வருவதில்லை. முன்னெரெல்லாம் வந்து கொண்டிருந்தார்கள் இப்பொழுது வருவதில்லை. இனி வரும் கூட்டங்களுக்கெல்லாம் உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறையினர் அவர்களுக்கும் கருத்து கேட்பு கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பு வைக்கப்பட வேண்டும். இந்தியா முழுமைக்கும் தெரிந்த ஊர் எது என்று கேட்டால் அது அடைமிதிப்பான்குளம் என ஏன் தெரிந்தது என்பது அனைவருக்கும் தெரியும். சுரங்கங்கள் செயல்படுத்தும் போது முறையாக பென்ச் அடித்து முறையாக சுரங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதை நிறைய சுரங்கங்கள் செயல்படுத்துவதில்லை. அதன் காரணமாக தான் நெல்லை மாவட்டத்தில் ஒரு மிகப் பெரிய விபத்து நிகழ்ந்தது. நெல்லை மாவட்டத்திற்கு நடந்தது இந்தியாவிற்கே முன் உதாரணமாக இருந்தது. இத்தகைய நிகழ்வின் போது மீட்பு நடவடிக்கைகளை சாதாரணமாக யாரும் செய்ய முடியாது. மீட்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு பேரிடர் மேலாண்மை குழுவினர் வந்து தான் மேற்கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகிறது. சுரங்கப் பணிகள் நடக்கும் போது முறையாக யாரும் சென்று ஆய்வு செய்வதில்லை. சுற்றுச்சூழல் துறையினருக்கு மற்றும் சுரங்க துறையினருக்கும் ஒரு பங்கு இருக்கிறது. சுரங்க பணிகள் நடக்கும் இடத்தில் அடிக்கடி ஆய்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு சுரங்கத்திற்கு சுரங்க நிறைவு திட்டம் கொடுக்கப்படுகிறது. திட்டங்கள் ஐந்தாண்டு தான். ஐந்தாண்டுகள் முடிந்த பின்பு குழியை மூட போவதில்லை அப்படியே விட்டுவிட்டு போய்விடுவார்கள். அதில் மழை நீர் தேங்கி குளம் போல கிடக்கும். இப்பொழுது கூட சிறுவர்கள் விழுந்து செத்து கொண்டிருக்கிறார்கள். இது தமிழ்நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. இந்த சுரங்க பணிகள் முடிவடைந்த பின் சுரங்கத்தை சுற்றி வேலி போடப்பட வேண்டும். அப்படி அந்த சுரங்கம் வேண்டாம் என்றால் அதை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுங்கள் அரசாங்கம் அதை நீர் நிலையாக அறிவித்து விடுவார்கள். Mines Closure plan என்று கொடுக்கிறார்கள் ஆனால் அதை யாரும் முறையாக செயல்படுத்துவதில்லை. இதை யாரும் சரிபார்ப்பதில்லை நிறைய இடங்கள் திறந்தே கிடக்கிறது. அவ்வாறு இருந்தால் நடவக்கை எடுக்க வேண்டாமா. சுரங்க பணிகள் முடிவடைந்த பன்பு முறையாக வேலி போட வேண்டும் அல்லது அரசாங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும் ஆனால் இதை யாரும் செய்வதில்லை. அதிகாரிகளும் கண்டுகொள்வதில்லை. யாரும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் ஆலோசனை

நிறுவனம் தனது செல்லத்தக்க அங்கீகாரத்தை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. தற்பொழுது தான் காண்பிக்கிறார்கள். 45 நாட்கள் முன்பு தான் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அதில் பழைய சான்று தான் இணைக்கப்பட்டுள்ளது. புதிய சான்று சேர்க்கப்படவில்லை. ஹை-டெக் குவாரிக்கு கருத்து கேட்பு கூட்டம் நடந்தபோது மூன்று குவாரிகளுக்கு திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஒரே கருத்து கேட்பு கூட்டமாக நடைபெற்றது. மேற்படி நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒரு குவாரி அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதன் சுற்றுச்சூழல் அனுமதியிலும் 500 மீட்டர் சுற்றளவில் 5 ஹக்டெருக்கு மேல் அனுமதி இல்லை என்று சொல்லபட்டிருந்தது. அதேபோல் சிறு கனிம விதிகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அந்த மூன்று குவாரிகளுக்கு அனுமதி கொடுக்க முடியுமா? முடியாதல்லவா இதை திட்ட ஆலாசகர் என்ற முறையில் முடியாது என்று சொல்லியிருக்க வேண்டும் அல்லவா. நிறுவனத்திற்கு எதுவும் தெரியாது. ஆலோசனைக்காக தான் உங்களை நியமித்திருக்கிறார்கள். நீங்கள் கேட்கும் ஆவணங்களை அவர்கள் கொடுப்பார்கள். நான் இந்த குவாரியை பற்றி சொல்லவில்லை. அந்த மூன்று குவாரியை தான் சொல்கிறேன். அந்த குவாரிகளை அனுமதிக்க முடியாது அவ்வாறு ஆலோசகராகிய நீங்கள் சொல்லாத காரணத்தால்தான் நாங்கள் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டியிருக்கிறது. சுரங்கப் பணிகளில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்று கேட்டால் சரக்கு போக்குவரத்து. லாரிகளில் கற்கள் எடுத்து செல்லும் போது அவை சிறு சிறு கிராமங்கள் வழியாக செல்கின்றன. ஒரு 10 டன் லாரி செல்வதென்றால் ரோட்டில் ஒரு எருமமாடு செல்வது போல. 30 டன் 40 டன் பாரம் ஏற்றிக்கொண்டு லாரி செல்வதென்பது ரோட்டில் ஒரு யானை செல்வது போல இந்த பக்கமும் யாரும் செல்ல முடியாது. அந்த பக்கமும் யாரும் செல்ல முடியாது. நிறைய விபத்துக்கள் நடக்கின்றன. இவர்கள் இதற்கு முன் 10 டன் லாரி தான் பயன்படுத்துவதாக சொன்னார்கள் இப்போது 20 டன் லாரி பயன்படுத்துவதாக சொல்கிறார்கள். ஆனால் பயன்படுத்துவதெல்லாம் 30, 40 டன் எடை கொண்ட லாரியை தான் பயன்படுத்துகிறார்கள். இதை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சுரங்க திட்டம் என்பது நீண்ட கால திட்டம் அல்ல ஒரு ஐந்தாண்டுகளுக்கான திட்டம். எனவே அங்கு பெரிய அளவிலான நிரந்தர தொழிலாளர்கள் இருக்க மாட்டர்கள். தற்காலிக தொழிலார்களை மட்டுமே வைத்திருப்பார்கள். இந்த தொழிலாலர்களுக்கு பாதுகாப்பு நடவைடிக்கைகள் சரிவர செய்யப்படுவதில்லை. தொழிலாளர்களுக்கு தொழில் சார்ந்த எல்லா பாதுகாப்பு நடவடிக்கைகளும் செய்யப்பட வேண்டும். பாதுகாப்பு நடவடிக்கைகள் எந்த தனியார் குவாரியிலும் செய்யப்படுவதில்லை. பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்கிறார்களா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

2. <u>திரு. மரியதாஸ், தருவை கிராமம், ஆலங்குளம்:-</u>

இந்த திட்டத்தினால் எங்களுக்கு எந்த வித பாதிப்பும் கிடையாது எங்களுக்கு நன்மை தான். எங்கள் ஆட்களுக்கு பொருளாதாரத்துக்கு வேலைக்கு போக வைக்க, ஊருக்கு எந்த பாதிப்பும் கிடையாது நல்லாவே இருக்குது. வந்து பத்து வருஷமாச்சு எந்த பாதிப்பும் கிடையாது நல்லாதான் இருக்குது என கூறினார்.

3. <u>திரு. செல்லத்துரை, தருவை கிராமம், ஈஸ்வரியாபுரம்:-</u>

இந்த குவாரி வருவதினால் எந்த பாதிப்பும் கிடையாது நன்மையாதான் இருக்கும் என கூறினார்.

4. <u>திரு சீசிமுத்து, கோவில் பூசாரி, ஈஸ்வரியாபுரம்:-</u>

இந்த கல் குவாரி எங்கள் ஊருக்கு பக்கம். இந்த குவாரியினால் எந்த பாதிப்பும் கிடையாது என கூறினார்.

5. <u>திரு. பாலசுப்பிரமணியன், திடியூர்:-</u>

எங்கள் பகுதியிலுள்ள படித்த பசங்க இந்த கல் குவாரியினால் ஹிடாச்சியில் மற்றும் லாரிகளில் டிரைவர்களாய் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த கல் குவாரியினால் வேலை வாய்ப்பு அதிகமாய் கிடைக்குது. கண்டிப்பா இதனால் நன்மை தான், தீமை கிடையாது என்பதாக கூறினார்.

6. <u>திரு.தங்கமணி, கண்டித்தான்குளம் கிராமம்:-</u>

நான் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அதிகாரிகள் இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டமைக்காக உங்களை நாங்கள் மனமார வாழ்த்துகிறோம். அது போல எங்களது நலனையும் நீங்கள் கேட்க வேண்டும். எங்கள் கிராம சுற்று வட்டார பகுதியில் உள்ள தொழிலாளர்கள் இந்த குவாரியை நம்பி தான் அவர்கள் வாழக்கையை நடத்தி வருகிறார்கள். இப்பொழுது தொழில் தடைபட்ட காரணத்தினால் என்னுடைய வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளை சரியாக படிக்க வைக்க முடியவில்லை அதற்கு பொருளாதாரம் இல்லை. ஏனென்றால் வேலை வாய்ப்பு இல்லை. இந்த வேலையை படித்தவர்கள் வந்து வேலை செய்ய மாட்டார்கள். படிக்காத தொழிலாளர்கள், படிக்காத கூலிகாரர்கள் வந்து தான் வேலை செய்ய வேண்டும். அது நீங்கள் மனதில் கொண்டு இப்பொழுது கூறப்பட்டுள்ள அனைத்து வகைகளையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள் பாதிப்பு இருந்தது உன்மை தான் ஆனாலும் அதை சரி செய்து விட்டு வாகன போக்குவரத்து மற்றும் தூசி தடுப்பு போன்றவற்றை அவர்கள் செம்மையாக செய்து தருவோம் என்று கூறியிருக்கிறார்கள். அதை நீங்கள் நினைவில் கொண்டு தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு தொழில் முனைவோர்களுக்கு சில ஆலோசனைகளை கொடுத்து தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு உடனடியாக துவங்க நீங்கள் ஆவண செய்து தர வேண்டும் என்று கூறினார்.

7. <u>திரு. டேனியல், கண்டித்தான்குளம்:-</u>

இங்கு அநேக காரியங்கள் சொல்லப்பட்டது. ஒரு சில சம்பவங்கள் நடந்தது. அரசு அனுமதித்துள்ள அளவுக்குள் சரியான முறையின்படி குவாரியை செயல்படுத்த வேண்டும். அரசு விதித்துள்ள அனுமதிக்கு அதிகமாக செயல்படும்பட்சத்தில் பாதிப்பு ஏற்படும். குறிக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு குவாரி செயல்படுவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். இதனால் அநேக குடும்பங்கள் நன்மை பெற்றுக் கொள்ள முடியும். இதனால் குவாரியில் பணி செய்ய

கூடியவர்களின் குடும்பங்கள் நல்ல நிலைக்கு வரும். எனவே அரசு விதித்துள்ள விதிப்படி சரியான ஆழம், வெடி மருந்து அதிகம் இல்லாதபடி குவாரி செயல்பட அனுமதி அளிக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

8. திரு. ஜெபஸ்டின், கண்டித்தான்குளம்:-

இந்த குவாரி இல்லாமல் எங்களுக்கு பொருளாதாரம் மிகவும் பாதிப்பாக உள்ளது. ஏனென்றால் கடந்த ஒன்றரை வருட காலமாக திருநெல்வேலி மாவட்டம், தருவை கிராமத்தை சுற்றியுள்ள எந்த குவாரியும் ஓடவில்லை. நான் ஒரு டிரைவர், கடந்த ஒன்றரை வருடம் டிரைவர் வேலை இல்லாமல் கொத்தனார் வேலை விவசாயம் போன்றவற்றை செய்து குழந்தைகளை படிக்க வைக்க வழி இல்லாமல் இருந்து வருகிறோம். இந்த குவாரியால் எந்த பிரச்சனையும் இல்லை. ஒரு சில காரணங்களால் தடைபட வேண்டிய நிலை ஆகிவிட்டது. திட்ட ஆலோசகர் சொன்னபடி இத்தனை செ.மீ, இத்தனை ஆழமுள்ள குழிகள், சாலைகளில் செல்லும் போது இத்தனை டன் லாரிகளில் கொண்டு செல்ல வேண்டும் போன்றவற்றை கடை பிடித்து எங்களுக்கு உதவியாக இருக்க கேட்டுக் கொண்டார். லாரியில் கற்களை எடுத்து செல்லும் போது டிரைவர்கள் கவனமாக இயக்க வேண்டும். அதற்கு உண்டான ஆயத்தங்களை அவர்களுக்கு செய்து கொடுக்கவும் கேட்டுக் கொண்டார். குவாரி இருந்தால் தான் பொருளாதாரம் பாதிப்பு இல்லாமல் எங்கள் அருகாமையில் நாங்கள் வேலை செய்ய முடியும். சுற்று வட்டார ஏழு எட்டு கிராமங்களில் கிட்டதட்ட 200 நபர்கள் வேலை இழந்துள்ளனர். இந்த 200 பேருக்கு வேலை வாய்ப்பு வேண்டுமென்றால் இந்த குவாரி தொடங்க வேண்டும். இதனால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. அதனால் தயவு செய்து இந்த குவாரி உடனே செயல்பட கேட்டுக் கொண்டார்.

பின்னர் பேசிய வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் காணொளி பதிவு செய்யப்பட்டுள்ளது, அதனை அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார். மேலும் அவர் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். அதனை தொடர்ந்து பொது மக்கள் சமர்ப்பித்த எழுத்துபூர்வமான மனுக்கள் வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் பெறப்பட்டு கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

23.5.23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

வருவாய் கோட்டாட்சியர்,
திருநெல்வேலி.